**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 72 of 2022 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : திரு.ஜெயபிரகாஷ்

Father's Name : வெங்கடாச்சலம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of August** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது கோவை மாவட்டம், கோவை வனக்கோட்டம், பெரியநாயக்கன்பாளையம் சமூக காடுகள் வனச்சரகத்தில் வனவராக பணி செய்து வருகிறேன். கடந்த 12.09.2019 ஆம் ஆண்டு கோவை வனச்சரகம் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளராக பணி செய்த பொழுது அன்று வனவர் சாராம்மாள் அவர்கள் தலைமையில் சோமனூர் அருகில் விசாரணைக்கு செல்ல வேண்டி உள்ளது என தெரிவித்து நான் வனக்காப்பாளர் நாகராஜன் மற்றும் வனவர் சாராம்மாள் ஆகிய மூன்று பேரும் மாலை 5 மணி அளவில் சோமனூர் அருகில் கருணாமூர்த்தி அவருடைய வீட்டில் வனவர் விசாரணை மேற்கொண்டதில் எதிரி பவளப்பாறைகளை எடுத்து ஆஜர் செய்தார். எதிரி கொடுத்த குற்றம் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அப்பொழுது வனவர் சாராம்மாள் மற்றும் காப்பாளர் நாகராஜன் இருந்தார்கள். என் முன்னிலையிலும் நாகராஜ் முன்னிலையிலும் தலமகசர் மற்றும் பிடிமகசர் தயார் செய்தொர்கள். மேற்படி ஸ்தலமகசரில் உள்ள 2 வது மற்றும் பிடி மகசரில் உள்ள 1 வது சாட்சி

கையொப்பம் என்னுடையதாகும். பின்னர் மேல்விசாணைக்காக கோவை வனசரகரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. EX.P1 AND EX.P2 மதுக்கரை முதலில் தயார் செய்தார்களா அல்லது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை முதலில் பதிவு செய்தீர்களா என்றால் நான் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதேசமயம் வனவர் EX.P1 AND EX.P2 தயார் செய்தார். நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த இடத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்பதற்கான குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலமானது எதிரியின் வீட்டில் வைத்து பதிவு செய்யப்பட்டது. நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் சாரம்மாள் வனவர் அவர்கள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான்.

2. மேலும் வனவர் ஸ்தல மகஜர் மற்றும் பிடி மகஜர் அதே நேரத்தில் தயார் செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். EX.P1 AND EX.P2 படித்துப் பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் தான் கைப்பற்றினார்கள். நானும் வனவரும் ஒரே நேரத்தில் EX.P1 AND EX.2 தயார் செய்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.08.18 18:33:55 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**